# 15 நாயின் சுயசரிதை

**படத்தைப் பற்றி கலந்துரையாடுவோம். ஆசிரியர் வாசிப்பதை செவிமடுப்போம், பொருள் விளங்கி வாசிப்போம்.**



அது ஒரு குளிர் காலம். நிலா வெளிச்சம் ஜன்னல் வழியே தெரிந்தது. ஒரு நாயின் முனகல் ஒலி கேட்டது. நான் ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தேன். வயதான நாய் ஒன்று குளிரில் நடுங்கிக்கொண்டு இருந்தது. அது என்னைப் பார்த்தது. மெது வாகப் பேசத் தொடங்கியது.

மகளே! அந்தக் காலம் ஓர் இனிய காலம். இன்பமாக வாழ்ந்த காலம். நினைக்கும்போதே, சந்தோஷமாக இருக்கிறது. தைமாதம் பிறந்தது. அன்று பொங்கற் பண்டிகை. அன்றைய தினம் எனது அம்மா அழகிய குட்டிகள் ஐந்தை ஈன்றார். அதில் நான் கடைக்குட்டி. எனக்கு இரண்டு அண்ணாமாரும், இரண்டு அக்காமாரும் இருந்தனர். எனது உடல் பஞ்சு போன்று இருந்தது. அதனால் அனைவரும் என்னை விரும்பினார்கள். 'வீரா' என என்னை அழைத்தார்கள்.

என் தாயின் அரவணைப்பில் நான் மகிழ்வுடன் வாழ்ந்தேன். ஆனால், அது சிறிது காலம் தான். ஒருநாள் அந்த வீட்டுக் கடைக்குட்டியின் நண்பி ரஞ்சனா வந்தாள். என்னைக் கண்டு ஆசைப்பட்டாள். என்னை அவளுடன் அவளது வீட்டுக் குக் கொண்டு சென்றாள். ரஞ்சனாவின் வீடு பெரிய வீடு. அங்கு நான் மிகவும் சந்தோசமாக வளர்ந்தேன்.

அங்கு நான் ஓடினேன், பாய்ந்தேன், சந்தோசமாக விளை யாடினேன், திரிந்தேன். வீட்டுக்கு வருவோர் என்னைக் கண்டு பயந்தார்கள். திருடரை ஓட ஓட விரட்டினேன். கோழிக் குஞ்சு களை வேட்டையாடினேன். கீரிகளும் கீரிப்பிள்ளைகளும் என்னைப் பார்த்துப் பயந்து ஓடின. சோறும் மீனும் நன்றாக உண்டேன். ரஞ்சனா என் குட்டித் தேவதை. என் உயிர்த் தோழி. என்னைக் கொஞ்சிக் கொஞ்சி விளையாடுவாள். அவளும் நானும் ஓடி விளையாடுவோம். பந்து விளையாடுவோம். இப்படி இன்பமாகக் காலம் நகர்ந்தது.

ரஞ்சனா புலமைப்பரிசில் பரீட்சை எழுதினாள். அதில் கூடிய புள்ளிகள் பெற்றாள். அதனால் நகரத்திலுள்ள பிரசித்தி பெற்ற பாடசாலையில் அனுமதி கிடைத்தது. அவள் அங்கு தங்கிப் படிக்க நேர்ந்தது. நானும் அவளும் கவலையுடன் பிரிந்தோம்.

அவளுடன் என் பொற்காலம் மெல்ல மெல்ல அகன்றது. என்னைக் கொஞ்ச எவரும் இல்லை. என்னுடன் விளையாட யாரும் இல்லை காலம் மெல்ல நகர்ந்தது. நான் துயரத்துடன் இருந்தேன். உணவு மட்டும் வேளைக்குக் கிடைத்தது. உணவு மட்டும் வாழ்க்கை ஆகுமா?

விடுமுறை வந்ததும் எனக்குக் கொண்டாட்டம். விடுமுறைக்கு ரஞ்சனா வருவாள். அப்பொழுது தாயைக் கண்ட கன்று போல அவளிடம் ஓடுவேன். அவளும் அன்புடன் என்னை அணைத்துக் கொள்வாள். விடுமுறையில் ஒரே விளையாட்டுத்தான் வேறு வேலை அவளுக்கில்லை. என்னால் ரஞ்சனா படிக்கவில்லை. அதனால் அவளது பெற்றோர் கவலைப்பட்டார்கள். அவளையும் ஏசினார்கள். எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. ரஞ்சனா அழுதாள். என்னால் தாங்க முடியவில்லை. எனவே வீட்டைவிட்டு செல்ல முடிவெடுத்தேன்.

இரவோடு, இரவாக வீட்டைவிட்டு வெளியேறினேன். காட்டிலும், மேட்டிலும் அலைந்து திரிந்தேன். பல இன்னல்களை அனுபவித்தேன். பலரும் என்னை துரத்தித் துரத்தி அடித்தனர். தெரு நாய்களும், நாய்க்குட்டிகளும் கூட என்னைத் துரத்தின. பசியும் என்னைத் துரத்தியது. பசியால் தவித்தேன். இறுதியில் உன்னைக் கண்டேன் என்றது.

மகளே! இந்த ஏழைக்கு உதவுவாயா? யாரும் இன்றி அநாதையாய் தவிக்கின்றேன். உனது வீட்டில் சிறிது இடம் தருவாயா? என்று கேட்டது.

என் மனம் இரங்கியது. ஓ எனத் தலையசைத்தேன்.

## செயற்பாடு - 01

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

1. அது ஒரு குளிர் காலம். ( )
2. சூரிய வெளிச்சம் ஜன்னல் வழியே தெரிந்தது. ( )
3. வீராவின் குட்டித் தேவதை ரஞ்சனா ( )
4. ரஞ்சனா ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசிலில் முதலிடம் பெறவில்லை. ( )
5. வீரா பல இன்னல்களை அனுபவிக்க இல்லை. ( )

## செயற்பாடு - 02

1. ஜன்னல் வழியே தெரிந்தது எது?
2. வீரா பிறந்த மாதம் எது?
3. வீராவுக்கு எத்தனை அண்ணாமாரும், அக்காமாரும் இருந்தனர்?
4. இங்கு கூறப்படும் குட்டித் தேவதையின் பெயர் யாது?
5. வீராவைத் துரத்தியவை எவை?

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| குளிர்காலம் | - | සීත කාලය |
| நிலா வெளிச்சம் | - | චන්ද්‍රාලෝකය/සඳ එළිය |
| முனகல் ஒலி | - | කෙඳිරිල්ල |
| நடுங்கி | - | වෙව්ලා |
| மெதுவாக | - | සෙමෙන් |
| இனிய காலம் | - | යහපත් කාලය |
| இன்பம் | - | සැපය/සතුට |
| கடைக்குட்டி | - | බඩ පිස්සා |
| அரவணைப்பு | - | රැකවරණය |
| திரிந்தேன் | - | ඇවිද්දෙමි |
| கீரி | - | මුගටියා |
| கீரிப்பிள்ளை | - | මුගටි පැටියා |
| நகர்ந்தது | - | ගෙවී ගියා |
| பொற்காலம் | - | ස්වර්ණමය යුගය |
| கொண்டாட்டம் | - | උත්සවය |
| ஏசினார்கள் | - | බැන්නා |
| அலைந்து திரிந்தேன் | - | එහෙ මෙහෙ ඇවිද්දෙමි |
| இன்னல்கள் | - | කරදර |
| அனுபவித்தேன் | - | වින්දෙමි |
| அநாதை | - | අනාථ |

## செயற்பாடு - 03

இச் சுயசரிதையை உங்கள் மொழிநடையில் பத்து வாக்கியங்களில் கூறுங்கள்.

## செயற்பாடு - 04

**பின்வரும் சட்டகத்தைப் பயன்படுத்திக், கட்டுரை ஒன்றை எழுதுங்கள்.**

**பேனாவின் சுயசரிதை**

★ பொருத்தமான அறிமுகம் - பேனாவின் தற்போதைய நிலை.

★ பேனை உருவான விதம்.

★ மூலப்பொருட்கள் தொழிற்சாலையில் முழு உருப்பெற்ற விதம்.

★ தொழிற்சாலையில் இருந்து விற்பனை நிலையத்திற்குக் கொண்டுவரல்.

★ (காட்சிப் பொருளாக இருத்தல்.)

★ பலர் பார்வையிடல் - ஒருவர் வாங்குதல்.

★ வாங்கிய பின் நடந்த சம்பவங்கள்.

★ பொருத்தமான முடிவுரை.

## செயற்பாடு - 05

நாயின் சுயசரிதையை அடிப்படையாகக் கொண்டு நீர் விரும்பிய வேறொரு பிராணியின் சுயசரிதையை எழுதுங்கள்.

**பின்வரும் சொற்றொடர்களை அவதானியுங்கள்**

**இனிய** காலம்.


**அழகிய** குட்டிகள்.

**பெரிய** வீடு.

**நன்றாக** உண்டேன்.

**கவலையாகப்** பிரிந்தேன்.

இவை பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களையும் சிறப்பிக்கின்றன.



## செயற்பாடு - 06

**கீழே தரப்பட்ட சொற்களை அடிப்படையாகக்கொண்டு வசனம் அமையுங்கள்.**

1. பழைய - ____________________
2. சிவப்பு - ____________________
3. புதிய - ____________________
4. அழகிய - ____________________
5. நல்ல - ____________________
6. வெள்ளை - ____________________

**சிறிய பூ** அழகானது.

**பெரிய புத்தகம்** வாங்கினேன்.

**நீண்ட கதை** கேட்டேன்.

**அழகிய முகம்** பார்த்தேன்.

**புதிய வீடு** கட்டினேன்.

பச்சை நிற எழுத்திலுள்ள இச்சொற்கள் பெயர்ச்சொற்களை சிறப்பிக்கின்றன.

**மெல்லக்** கதைத்தேன். **மெல்லக்** கதைத்தோம்.

**வேகமாக** ஓடினேன். **வேகமாக** ஓடினோம்.

**விரைவாக** நடந்தேன். **விரைவாக** நடந்தோம்.

**கவனமாகப்** படித்தேன். **கவனமாகப்** படித்தோம்.

பச்சை நிற எழுத்திலுள்ள இச்சொற்கள் வினைச் சொற்களைச் சிறப்பிக்கின்றன.

## செயற்பாடு - 07

**கீழ்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமையுங்கள்.**

1. அழகாக - ____________________
2. மெதுவாக - ____________________
3. கோவமாக - ____________________
4. சந்தோஷமாக - ____________________
5. கவலையாக - ____________________
6. உண்மையாக - ____________________

## செயற்பாடு - 08

**பின்வரும் இடைவெளிகளில் பொருத்தமான அடை மொழிகளை இணைத்து எழுதுங்கள்.**

1. அது ஒரு ________________ காலம்.

2. ________________ நாய் ஓடியது.

3. எலிகளை ________________ வேட்டையாடினேன்.


4. கீரிகளும், கீரிப்பிள்ளைகளும் ________________ ஓடின.

**பின்வரும் வாக்கியங்களை வாசியுங்கள்,**

நாய்க் **குட்டி** ஓடியது.

பூனைக் **குட்டி** வந்தது.

இவ்வாக்கியங்களில் வரும் **குட்டி** போன்று வேறு பல இளமைப் பெயர்கள் உண்டு. அவற்றைக் கற்போம்.



ஆடு **ட்டுக்**


நாய் **க்**

பூனை **க்**

முயல்

மான்

யானை **க்**





அணில் **ற்**

கிளி **ப்**

தென்**னம்**

கமுகு **கம்**

கீரி **ப்**



## பின்வரும் சொற்களை அவதானியுங்கள்

மரம், சிங்கம், பழம்

மரம்
சிங்கம்
பழம்

\+

த்து

\+

ஐ
ஆல்
ஒடு
க்கு
இல்
இன்

1. **மரத்தை** வெட்டினான்.

2. **மரத்தால்** விழுந்தான்.

3. **மரத்தோடு** கட்டினான்.

4. **மரத்துக்கு** தண்ணீர் ஊற்றினான்.

5. **மரத்தில்** ஏறினான்.

6. இந்த **மரத்தின்** பழம் இனிமையானது.

## செயற்பாடு - 09

**பின்வரும் அட்டவணையை நிரப்புங்கள்**

| மரம் | சிங்கம் | பழம் |
|---|---|---|
| மரத்தை | ________ | ________ |
| மரத்தால் | ________ | ________ |
| மரத்தோடு | ________ | ________ |
| மரத்துக்கு | ________ | ________ |
| மரத்தில் | ________ | ________ |
| மரத்தின் | ________ | ________ |

### பின்வரும் சொற்களை அவதானியுங்கள்

மாடு, ஆடு, வீடு

மாடு
ஆடு
வீடு

\+

ட்டு

\+

ஐ
ஆல்
ஒடு
க்கு
இல்
இன்

1. **மாட்டைக்** கட்டினான்.
2. **மாட்டால்** உழுதான்.
3. **மாட்டோடு** வந்தான்.
4. **மாட்டுக்கு** புல் வைத்தான்.
5. **மாட்டில்** பால் கறந்தான்.
6. **மாட்டின்** பால் இனிமையானது.

## செயற்பாடு - 11

**பின்வரும் அட்டவணையை நிரப்புங்கள்**

| ஆடு | சிங்கம் | பழம் |
|---|---|---|
| ஆட்டை | ____________ | ____________ |
| ஆட்டால் | ____________ | ____________ |
| ஆட்டோடு | ____________ | ____________ |
| ஆட்டுக்கு | ____________ | ____________ |
| ஆட்டில் | ____________ | ____________ |
| ஆட்டின் | ____________ | ____________ |

### பின்வரும் சொற்களை அவதானியுங்கள்

சோறு, கிணறு, ஆறு

| | | | | |
|---|---|---|---|---|
| சோறு<br>கிணறு<br>ஆறு | + | ற்று | + | ஐ<br>ஆல்<br>ஒடு<br>க்கு<br>இல்<br>இன் |

1. **சோற்றை** உண்டாள்.
2. **சோற்றால்** கஞ்சி செய்தாள்.
3. **சோற்றோடு** வந்தாள்.
4. **சோற்றுக்கு** உப்புப் போட்டாள்.
5. **சோற்றில்** கல் எடுத்தாள்.
6. **சோற்றின்** சுவை அதிகம்.

## செயற்பாடு - 12

| | | |
|---|---|---|
| சோறு | கிணறு | ஆறு |
| சோற்றை | ________ | ________ |
| சோற்றால் | ________ | ________ |
| சோற்றோடு | ________ | ________ |
| சோற்றுக்கு | ________ | ________ |
| சோற்றில் | ________ | ________ |
| சோற்றின் | ________ | ________ |

1. கமலத்தை வரச் சொல்லுங்கள்.

2. கமலத்தால் வர முடியவில்லை.

3. கமலத்தோடு வந்தான்.

4. கமலத்துக்கு சுகம் இல்லை.

5. கமலத்தில் பிழை இல்லை.

6. கமலத்தின் வீடு அழகியது.

## செயற்பாடு - 09

**பின்வரும் சொற்களுக்கு சமமான கருத்து தரும் சொற்களை பாடத்தில் இருந்து தெரிந்து எழுதுங்கள்.**

1. சந்திரன் ____________________
2. சாரளம் ____________________
3. உடல் ____________________
4. அன்னை ____________________
5. இல்லம் ____________________
6. நாள் ____________________
7. மகிழ்ச்சி ____________________
8. கவலை ____________________
9. சிரசு ____________________
10. நண்பி ____________________

## செயற்பாடு - 10

**பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துத் தரும் சொற்களைப் பாடத்தில் இருந்து தெரிந்து எழுதுங்கள்.**

1. இருள் ______________________
2. பகல் ______________________
3. இளமை ______________________
4. அழுதது ______________________
5. கவலை ______________________
6. துன்பம் ______________________
7. நிறை ______________________
8. மேடு ______________________
9. சிலர் ______________________
10. முதல் ______________________

## செயற்பாடு -11

**பின்வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான இளமைப் பெயர்களைக் கொண்டு வாக்கியங்களை நிறைவு செய்யுங்கள்.**

1. அணில் ________________________ மாம்பழம் தின்றது.
2. கீரி ________________________ பாம்பைக் கண்டு ஓடியது.
3. பூனை ________________________ எலி பிடித்தது.
4. நாய் ________________________ திருடனை விரட்டியது.
5. கோழி ________________________ கழுகைக் கண்டு பயந்தது.